பக்கங்கள் 17+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 13 திங்கட்கிழமை 29.09.2025 | அதிர்வு 60

## அர்ச்சுனா கைது!



யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா, கோட்டை பொலிஸாரால் இன்று கைது செய்யப்பட்டார். 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### காற்றாலைத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து

# மன்னாரில் மாபெரும் போராட்டம்

### அன்றாட செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் முன்னெடுக்கப்படும் காற்றாலைத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று மன்னாரில் பொது முடக்கமும் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியும் நடைபெற்றன.

மன்னாரில் காற்றாலை செயற்றிட்டத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் இருந்த மக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலுக்குக் கடும் எதிர்ப்பை வெளியிடும் வகையிலும் மன்னாரில் பொது முடக்கமும் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியும் இன்று இடம்பெற்றன. 04











# மண்மேடு சரிந்து வீழ்ந்து மூவர் பரிதாப உயிரிழப்பு

## மாவனல்லையில் இன்று சோகம்

மாவனல்லை, அளுத்நுவர மாணிக்காவ பகுதியில் கட்டுமானப் பணியின் போது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் மூவர் பலியாகியுள்ளனர்.

இன்று முற்பகல் வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் மூன்று தொழிலாளர்கள் மண்ணுக்குள் புதையுண்டனர். இதனையடுத்து மீட்பு நடவடிக்கை இடம்பெற்றது.

கடும் போராட்டத்துக்கு மத்தியில் மூவரும் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

# பாடசாலைக்குள் நுழைந்து மாணவனைத் தாக்கிய பணி இடைநீக்கம் செய்யப்பட்ட கான்ஸ்டபிள் கைது!

நவகமுவ பிரதேசத்தில் உள்ள பாடசாலைக்குள் நுழைந்து மாணவன் ஒருவனைத் தாக்கினார் எனக் கூறப்படும் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நவகமுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

9 வயதுடைய மாணவனே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஆவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சந்தேகநபரான பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளின் மகள் அந்தப் பாடசாலையில் தாக்குதலுக்குள்ளான மாணவனுடன் ஒன்றாகக் கல்வி கற்று வந்துள்ளார்.

இந்நிலையில் சந்தேகநபரான பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளின் மகள், பாடசாலையின் இடைவேளை நேரத்தில் சக மாணவர்களுடன் இணைந்து விளையாடிக்கொண்டிருக்கும் போது கீழே தள்ளிவிடப்பட்டுக் காயமடைந்துள்ளார்.

இதனால் சந்தேகநபரான பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளின் மகளின் முன் பல் ஒன்று உடைந்துள்ளது.

கோபமடைந்த சந்தேகநபரான பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் பாடசாலைக்குள் நுழைந்து மாணவனைத் தாக்கியுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான மாணவன் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நவகமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# களனி ஆற்றில் ஆணின் சடலம் மீட்பு!

கடுவலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடுவலை பாலத்தின் கீழ் களனி ஆற்றில் சந்தேகத்துக்கிடமான சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

வகடுவலை பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்று ஞாயிற்றுக்கிழமை சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும், அவர் 35 முதல் 40 வயதுக்கிடைப்பட்ட ஆண் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், பொலிஸார் நடத்திய விசாரணைகளில், காற்சட்டையின் இரண்டு முனைகளும் ஒன்றாகக் கட்டப்பட்டு, கற்கள் நிரப்பப்பட்டு உயிரிழந்தவரின் இடுப்பில் கட்டப்பட்டிருந்தது கண்டறியப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைகளுக்காக உடல் தடயவியல் மருத்துவ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கடுவலை பொலிஸ் நிலையம் மேற்கொண்டு வருகின்றது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

அர்ச்சுனா கைது...

கொழும்பு, கோட்டையில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கேற்பதற்கு அர்ச்சுனா எம்.பி. வருகை தந்திருந்தார். இதன் போது கடமையில் இருந்த போக்குவரத்துப் பொலிஸாருக்கு அவர் இடையூறு விளைவித்திருந்தார். தவறான வார்த்தைப் பிரயோகத்தையும் மேற்கொண்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காகக் கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு இன்று அவர் அழைக்கப்பட்டிருந்தார். வாக்குமூலம் பெறப்பட்டதன் பின்னர் அவர் கைது செய்யப்பட்டார்.

அவர் கொழும்புக் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது பிணையில் விடுவிக்கப்பட்டார்.



# சர்வதேச நீதி கோரி சுழற்சி முறையில் இன்று 5 ஆவது நாளாக உண்ணாவிரதம்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழர்களுக்குச் சர்வதேச நீதி கோரி சுழற்சி முறையிலான உண்ணா விரதப் போராட்டம் இன்று திங்கட்கிழமை 5 ஆவது நாளாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட் டம் யாழ் செம்மணியில் கடந்த 25 ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில் எதிர் வரும் முதலாம் திகதி வரை நடைபெற வுள்ளது.

இன்றைய போராட்டத்தில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த பொது அமைப்புக ளின் பிரதிநிதிகள், முஸ்லிம் மக்கள் எனப் பலரும் இணைந்து கொண்ட னர்

















# காற்றாலைத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னாரில் மாபெரும் போராட்டம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை 10.30 மணியளவில் மன்னார் நகர சபை பொது மைதானத்தில் ஆரம்பமாகிய பேரணி, மன்னார் பிரதான வீதியூடக பஸார் பகுதிக்குச் சென்று மாவட்ட செயலகத்துக்கு முன்பாக பல்லாயிரக்கணக்கான மக்களுடன் பல கோஷங்களை எழுப்பியவாறு மாபெரும் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தின் இறுதியில் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை ஜனாதிபதிக்கு கையளிக்கும் வகையில் மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் கையளித்தோம் என்று மன்னார் பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.

இன்றைய போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களுடன் மதகுருமார்களும், அரசியல்வாதிகளும் கலந்து கொண்டனர்.















# காற்றாலைத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து
# மன்னாரில் மாபெரும் போராட்டம்













# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சமூகப் பாதுகாப்பு முக்கியம்

பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருக்கும் நாட்டைத் தூக்கி நிறுத்துவதற்காக அந்நிய செலாவணி வருமானம் ஈட்டலை பிரதான இலக்காக கொண்டு செயல்பட வேண்டிய கட்டாயத்தில் அரசாங்கம் இருக்கின்றது. இறக்குமதிகளைக் குறைத்து, ஏற்றுமதிப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் இதனை எட்டலாம் என்றாலும், இலங்கைக்கு அது உடனடியாக சாத்தியமில்லை என்பதால் அந்நிய செலாவணி ஈட்டலுக்கு அரசாங்கம் வேறு வழிகளை நாடுகின்றது.

வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களின் வருமானம் மூலமாகவும் சுற்றுலாப் பயணத் துறையை ஊக்குவிப்பதற்கு மூலமும் இதனை ஈட்ட அரசு இயன்றவரை முயல்கின்றது. அதற்காக சுற்றுலாப் பயணத் துறையை ஊக்குவிக்கும் பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருப்பது வெளிப்படையானது. நாட்டில் சுற்றுலாப் பயணத் துறைக்கு பல வகைகளிலும் முன்னுரிமையும் கொடுக்கப்படுகின்றது.

ஆயினும், தொன்மையான பல்லின கலாச்சாரங்களையும் பண்பாட்டு விழுமியங்களையும் கொண்ட இலங்கை போன்ற நாடுகளில் சுற்றுலாப் பயண துறையின் வருகை - சுற்றுலாப் பயணிகளின் படையெடுப்பு - மிக மோசமான, பாதிப்பான விளைவுகளை சமூகத்தில் ஏற்படுத்தி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தாய்லாந்து போன்ற நாடுகள் சுற்றுலாப் பயணத் துறையை முழுமையாக நம்பி இருக்கும் பின்னணியில், அவற்றின் கலாசாரக் கோலங்களும் அத்தகைய விடயதுக்குள் மூழ்கி நொடிந்து போயிருப்பது வெளிப்படையானது. முக்கியமாக பாலியல் விவகாரங்களை இலக்காகக் கொண்ட சுற்றுலாப் பயணிகள் பெரும் எண்ணிக்கையில் தாய்லாந்து போன்ற நாடுகளுக்குப் படையெடுக்கின்ற ஒரு நிலைமை வெளிப்படையாகவே தோற்றுகின்றது. அத்தகைய நிலைமை - கலாசாரச் சீரழிவு - இலங்கையில் ஏற்படாமல் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகையைக் கையாள வேண்டும் என்பது முக்கியமான விடயமாகும்.

ஆனால் ஒரு பாலின சேர்க்கையாளர்கள், இரு பாலினத்தவர்கள், பால் மாற்றம் செய்தோர், திருநங்கைகள், இடைப்பாலினர் எனக் கூறப்படுகின்ற LGBTIQ சமூகத்தினரை இலக்காகக் கொண்ட சுற்றுலாப் பயண சுற்றுலா துறையை மேம்படுத்தும் ஒரு திட்டத்தை இலங்கை சுற்றுலாப் பயணத் துறை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்திருப்பதாக கூறப்படுவது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கின்றது.

மேற்படி பாலின சமூகத்தை இலக்காகக் கொண்ட சுற்றுலாப் பிரச்சாரத்தை ஊக்குவிக்கும் அரசாங்கத்தின் முடிவுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இயற்கை அழகும் கலாச்சார பாரம்பரியமும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க போதுமானவை என்றும், பாலியல் நோக்குநிலை அல்லது பாலினம் தொடர்பான பிரச்சினைகளை முன்னிலைப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்றும் அவர் வலியுறுத்தினார்.

“எங்கள் சுற்றுலா மேம்பாடு பாலியல் நோக்குநிலை அல்லது பாலின பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கக்கூடாது. பாலியல் விருப்பங்களைப் பொருட்படுத்தாமல், உலகம் முழுவதிலுமிருந்து சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க எங்கள் பாரம்பரியம் போதுமானது” என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

“இதுபோன்ற உணர்திறன் மிக்க பிரச்சினைகளை மிகவும் பொறுப்புடன் அணுக வேண்டும்” என்று வலியுறுத்தி, இந்த முடிவை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை அதன் கண்கவர் இயற்கை அழகு, கலாச்சாரம் மற்றும் மரபுகள் காரணமாக நீண்ட காலமாக ஒரு பிரபலமான சுற்றுலா தலமாக இருந்து வருகிறது என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காக நாம் பாலியல் அடையாளத்தில் கவனம் செலுத்தத் தேவையில்லை என்று நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ள கருத்தை அரசு கவனத்தில் எடுத்துத் தனது முடிவை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

# போலி இலக்கத் தகடுகளுடன் கொட்டாவையில் ஒருவர் கைது

போலி வாகன இலக்க தகடுகள், வெடிபொருள்கள் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் உள்ளிட்டவைகளை வைத்திருந்த சந்தேக நபர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை, ஜெயவர்தனபுர முகாமைச் சேர்ந்த அதிகாரிகள் குழு, கொட்டாவ பொலிஸ் பிரிவின் ருக்மலே வீதி பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின்போதே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, அவரிடமிருந்து, 75 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோயின், பல்வேறு வகையான 458 வெடிமருந்துகள், ஒரு ரி-56 வெடிமருந்து தோட்டா, 30 போலி வாகன இலக்க தகடுகள், 15 வருமான வாகன உரிமங்கள், 15 காப்பீட்டு சான்றிதழ்கள் மற்றும் இரண்டு தொலைபேசிகள் என்பன கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர் கைது செய்யப்பட்டு மேல் மாகாண தெற்கு குற்ற தடுப்புப்பிரிவில் ஒப்படைக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மொரட்டுவை – அங்குலான பகுதியை சேர்ந்த 24 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

மேல் மாகாண தெற்கு குற்ற தடுப்புப் பிரிவினரால் மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.






# மகிழடித்தீவில் கண்ணகி விழா

கண்ணகி கலை இலக்கியக் கூடல் நடாத்தும் 10 ஆவது கண்ணகி இலக்கிய விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் மகிழடித்தீவு கலாசார மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கண்ணகி கலை இலக்கியக் கூடல் உறுப்பினரும், விழாக்குழுத் தலைவருமான ஆ. தனுஷ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் திருமதி புளோரன்ஸ் பாரதி கென்னடி முன்னிலை வகிக்க, ஈழத் தமிழ் கலைஞர் ஒன்றியத் தலைவர் வைத்திய கலாநிதி சி.சிவன்சுதன், கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி றூபி வலன் ரீனா பிரான்சிஸ் ஆகியோர் முதன்மை அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

கண்ணகி கலை இலக்கியக் கூடல் நடாத்திய பத்தாவது கண்ணகி இலக்கிய விழாவில் வாழும் போதே வாழ்த்தும் உயரிய பண்புக்கிணங்க இரு மூத்த கலைஞர்கள் விருது மற்றும் பொற்கிளி வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் கலைஞர்களை “வாழும் போதே வாழ்த்துவோம்“ எனும் தொனிப் பொருளுக்கமைய கன்னன்குடா பருத்திச்சேனையைச் சேர்ந்த கிருஸ்ண பிள்ளை அருளம்பலத்துக்கு கூடலின் விபுலானந்தர் விருதும், கன்னன்குடாவைச் சேர்ந்த மு.கதிர்காமநாதன் அண்ணாவியாருக்கு கூத்துக் கலைஞருக்கான தலைக்கோள் விருதும் வழங்கிக் கௌரவப்படுத்தப்பட்டனர்.

இதன்போது மாணவர்களின் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன.









# சமூக பொலிஸ் குழு நிர்வாகிகளுக்கான சட்ட ஆலோசனை தொடர்பான கூட்டம்

நுவரெலியா மாவட்டத்தின் அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவில் அக்கரப்பத்தனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த பண்டார தலைமையில் சமூக பொலிஸ் குழு நிர்வாகிகளுக்கான சமூக விழிப்பணர்வு மற்றும் சட்ட ஆலோசனைகள் தொடர்பான கூட்டம் நேற்று அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.



இந்த கலந்துரையாடலில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால், அக்கரப்பத்தனை பொலிஸ் பிரதேசத்தில் காணப்படும் பொலிஸ் சேவைகளின் மூலம் தீர்வுக்காணப்பட வேண்டிய பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறியப்பட்டதுடன், போதை பொருள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாகவும் விஷேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் விரைவில் சில நடவடிக்கைகளுடன் சமூக பாதுகாப்பு திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த பண்டார தெரிவித்தார்.







# மன்னாரில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டி

(மன்னார் நிருபர்)

மன்னார் பனங்கட்டுகொட்டு புனித சூசையப்பர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் அமரர் தர்மலிங்கம் மனோன் மணி தம்பதிகளின் நினைவாக இடம்பெற்ற உதைபந்தாட்ட போட்டியின் இறுதி நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை புனித சூசையப்பர் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கனடா புரோடல் டிரான்சிட் லைன் அண்ட் நியூ கொமர்ஸ் பினான்சியல் குறுப் இயக்குனர் அகஸ்ரின் சவேரியான் மற்றும் கௌரவ விருந்தினர்களாக புனித செபஸ்தியார் பேராலய பங்குத்தந்தை அருட்தந்தை பி.கிறிஸ்து நாயகம் அடிகளார், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், காதர் மஸ்தான், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் நகர சபையின் தவிசாளர் டானியல் வசந்தன், பொறியியலாளர் எஸ்.விமலேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது, பனங்கட்டுக்கொட்டு சென் ஜோசப் அணிக்கும், நானாட்டான் டைமன் ஸ்டார் அணிக்கும் இடையில் இறுதி போட்டி இடம் பெற்றது.

இறுதியில் நானாட்டான் டைமன் ஸ்டார் அணி முதலிடத்தையும், பனங்கட்டு கொட்டு சென் ஜோசப் அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இதன் போது வெற்றி பெற்ற அணிகளுக்கு பண பரிசில்கள் மற்றும் வெற்றிக் கேடயங்களும் வழங்கி வைக்கப் பட்டன.

















# ஊழலுக்கு எதிரான போராட்டத்துக்கு அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவோம்

## நாடாளுமன்ற உறுப்பினர் இளையதம்பி சிறிநாத் தெரிவிப்பு

ஊழலுக்கு எதிரான போராட்டம் மற்றும் போதைப் பொருள்களுக்கு எதிரான போராட்டம், வன்முறையற்ற நிகழ்வுகளுக்கும் எங்களுடைய ஆதரவுகளை அரசாங்கத்திற்கு வழங்கி வருகின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இளையதம்பி சிறிநாத் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கோட்டைகல்லாறு பிறண்சிப் விளையாட்டுக் கழகம் நடாத்திய கலாசார விளையாட்டு விழா கோட்டைக் கல்லாறு பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதன்போது கலாசார விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந்நிகழ்வுக்கு அதிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர்களான இளையதம்பி சிறிநாத், இரா.சாணக்கியன் மற்றும் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் மேகசுந்தரம் வினோராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது உரையாற்றியபோது நாடாளுமன்ற உறுப்பினர் இ.ஸ்ரீநாத் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கோட்டைக்கல்லாறு விளையாட்டு மைதானம் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். இது தொடர்பில் எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் கதைத்துள்ளேன் அதற்கு அவர்கள் ஒத்திசைவான பதில்களைத் தந்துள்ளார்கள். எதிர்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து இந்த விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை விளையாட்டு அமைச்சினூடாகவும் எடுப்போம்.

விளையாட்டுத்துறைகள் எல்லாம் மாகாணசபைகளுடாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பொறுப்பு இருக்கின்றது. தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திலே பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஊழலுக்கு எதிரான போராட்டம், மற்றும் போதைப் பொருட்களுக்கு எதிரான போராட்டம், வன்முறையற்ற நிகழ்வுகளுக்கும் எங்களுடைய ஆதரவுகளை வழங்கி வருகின்றோம்.

எனினும் எமது மாவட்டத்தின் அபிவிருத்தி, அரசியல் தீர்வு, போன்றன போதியளவாக இல்லை. பிடிக்கப்பட்டுள்ள நிலங்கள் முழுமையாக விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகள் மந்தகதியில் உள்ளன. மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்பட வேண்டும்.” – என்றார்.

# தெனியாய - அங்குரஸ்ஸ வீதியில் வாகன விபத்து; ஒருவர் உயிரிழப்பு

மொரவக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெனியாய – அங்குரஸ்ஸ வீதியின் 61வது கிலோ மீற்றர் சந்திக்கு அருகில், இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தெனியாய நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள், ஒரு கெப்ரக வாகனம் மற்றும் பஸ்ஸுடன் மோதி நேற்று இரவு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநரும், மற்றுமொருவரும் பலத்த காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் கொஸ்னில் கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.



உயிரிழந்தவர் மொரவக்க பகுதியை சேர்ந்த 19 வயதுடையவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் கொஸ்னில்கொட வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மொரவக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# கைது நடவடிக்கைகளை நாங்கள் வரவேற்கிறோம்

## நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவிப்பு

“நாட்டை திரைப்படம் போலவேதான் நடாத்திக் கொண்டிருக்கின்றார்கள் நாட்டில் ஒவ்வொரு நாளும் ஏங்கேயோ ஓரிடத்தில் கைதுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதைப்பார்த்து எமது மக்களும் திருடர்களைக் கைது செய்கின்றாரகள், திருடர்களை சிறையிலே அடைத்து விடுகின்றார்கள் என சந்தோசப்படுகின்றார்கள். அது எங்களுக்கும் சந்தோசம்தான்.”

– இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கோட்டைகல்லாறு பிறண்சிப் விளையாட்டுக் கழகம் நடாத்திய கலாசார விளையாட்டு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மட்டக்களப்பு மாவட்டாத்திலே சொத்துக்களையும், வளங்களையும் களவு செய்த பட்டியலை வெளியிட்டத்தில் பெருளவான பங்கு எமக்கிருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலே இருக்கின்ற மண்வளங்களைச் சூறையாடுவதைப்பற்றி, மட்டக்களப்பு மாவட்டத்திலே ஒரு லட்சம் வேலைவாய்ப்பிலே கொள்ளையடித்தைதைப்பற்றி, ஒப்பந்தங்கள் செய்து கொள்ளையடித்தமை போன்றவற்றையெல்லாம் தொடற்சியாக வெளிப்படுத்தி வந்தவர்கள் நாங்கள்.

இந்த ஊழல்களுக்கு எதிராக நாங்கள் அதிகளவு குரல் கொடுத்திருக்கின்றோம். பன்முகப்படுத்தப்பட்ட நிதியை எவ்வாறு கையாள்வது என தெரியத சில முட்டாள்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சி மீதும் எமது கட்சியைச் சேர்ந்தவர்கள் மீதும் நாங்கள் மோசடி செய்ததாக பல குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார்கள்.

எவ்வளவோ ஊழல் மோசடிகளை வெளிப்படுத்திய எங்கள் மீது மக்கள் நம்பிக்கை வைத்ததனால் தான், அதிகூடிய வாக்குகளை மட்டக்களப்பு மக்கள் எனக்குத் தந்தார்கள். ஒருசிலர் எமக்கு அவப் பெயரை உருவாக்கப் பார்க்கின்றார்கள்.

அரசாங்கம் செய்யும் கைது நடவடிக்கைகளை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் நாம் எதிர்பார்ப்பது என்னவெனில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் கடந்த ஒரு வருடத்தில் அரசாங்கம் சேகரித்த நிதி எங்கே அந்த நிதியைக் கொண்டு வந்து அபிவிருத்தி செய்யுங்கள்.” – என்றார்.



# மூதூரில் படகு மூழ்கியதில் ஒருவரைக் காணவில்லை

மூதூர் கடல் பிராந்தியத்திலிருந்து வெளிக்கடல் நோக்கிச் சென்று திரும்பியபோது, படகு ஒன்று மூழ்கியதில் மூதூர் தக்வா நகரைச் சேர்ந்த ஜுனைது அனஸ் என்பவர் காணாமல் போயுள்ளார்.

இச்சம்பவம் இன்று திங்கட்கிழமை அதிகாலை 3.00 மணியளவில் இடம்பெற்றது.

மேற்படி படகில் இரு மீனவர்கள் சென்றிருந்த நிலையில் விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் ஒருவர் காணாமல் போன நிலையில், மற்றொரு மீனவர் மிதக்கும் கலனின் உதவியுடன் மிதந்து வந்த நிலையில். மீனவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளார்.

காணாமல் போன 38 வயதான 3 பிள்ளைகளின் தந்தையை தேடும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

# ஜா எல - மினுவாங்கொடை வீதி விபத்தில் ஒருவர் பலி

ஜா-எல பொலிஸ் பிரிவில், ஜா-எல - மினுவாங்கொடை வீதியில் மொன்டா சந்திக்கு அருகில், ஜா-எலவிலிருந்து மினுவாங்கொடை நோக்கிச் சென்ற கார் மோதி பாதசாரி உயிரிழந்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் பாதசாரி பலத்த காயமடைந்து ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் ஜா-எல - கனுவான பகுதியைச் சேர்ந்த 60 வயதுடையவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் ராகம வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஜா-எல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# முல்லைத்தீவில் பிரமாண்டமாக இடம்பெற்றது சதுரங்கப் போட்டி

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் Mullai Chess Championship 2025 சதுரங்கப் போட்டி மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

மஜிக்கல் நைற் செஸ் அக்கடமி யின் ஏற்பாட்டில், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் இந்த போட்டி இடம்பெற்றது.

இந்த மாபெரும் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 350 இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்கேற்றமை முல்லைத்தீவு மாவட்ட சதுரங்க வரலாற்றில் ஒரு குறிப்பிடத் தக்க அடையாளமாக அமைந்துள்ளது.

சமீப காலங்களில் சதுரங்கத்தில் திடீர் வளர்ச்சி அடைந்துவரும் முல்லைத் தீவு மாவட்டத்தில், இப்போட்டியானது முன்னேற்றத்தை மேலும் வலுப்படுத்தும் நிகழ்வாக சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

இந்த சதுரங்க போட்டியில் பாடசாலை மாணவ, மாணவிகள் , இளைஞர்கள், பெற்றோர்கள் என ஆர்வத்துடன் பங்கு பற்றியிருந்தனர்.

போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பதக்கங்கள், கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்ததுடன், பங்குபற்றிய அனைத்து வீர வீராங்கனைகளுக்குமான சான்றிதழ்களும் மஜிக்கல் நைற் செஸ் அக்கடமியினால் வழங்கி வைக்கப்பட்டது.















# எல்லாவற்றையும் எதிர்ப்பது என்ற மனநிலையில் மாற்றம் வேண்டும்

## யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில்துறை மன்றத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தில் ஆளுநர் வலியுறுத்து












"எல்லாவற்றையும் எதிர்ப்பது என்ற மக்களின் மனநிலையில் மாற்றம் வேண்டும். கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு பேரம் பேசி எமக்குத் தேவையானதை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். இதனூடாக எமது மாகாண மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும்."

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் துறை மன்றத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் யாழ்ப்பாணம் செல்வா பலஸில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை மன்றத்தின் தலைவர் கு.வசீகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய ஆளுநர், "இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கு எமது மாகாணம் 4 சதவீதத்தையே பங்களிப்புச் செய்கின்றது. இதை 10 அல்லது அதைவிடக் கூடியளவு உயர்த்துவதற்குத் தேவையான வளம் எமது மாகாணத்தில் இருக்கின்றது. நாங்கள் எங்கள் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தவில்லை.

பெறுமதி சேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றுவது மற்றும் ஏற்றுமதியை மேற்கொள்வது என்ற இரண்டு முறைமைகளின் ஊடாகவும் தேசிய உற்பத்திக்கான எங்களின் பங்களிப்பை பெருமளவு அதிகரித்துக் கொள்ள முடியும்.

எனக்கு முன்னர் உரையாற்றிய பேச்சாளர்கள் குறிப்பிட்டதைப்போன்று எமது மாகாணத்தில் அதிகளவான மக்கள் நெல் உற்பத்தியையே மேற்கொள்கின்றனர். அதை மாற்றியமைப்பதற்கு நாங்கள் முயற்சிக்கின்றோம்.

போருக்கு முன்னர் இருந்த ஏற்று நீர்பாசனத் திட்டங்கள் பலவும் அழிவடைந்து விட்டன. இன்னமும் 21 ஏற்று நீர்பாசனத் திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்படவில்லை. ஏற்று நீர்பாசனத் திட்டத்தை மீள ஆரம்பிப்பதன் ஊடாக மாற்றுப் பயிர் செய்கையை விவசாயிகளிடம் ஊக்குவிக்க முடியும்.

எமது மாகாண விவசாயிகள் திறமையானவர்கள். எந்தவொரு பயிர் வகையையும் வேண்டியளவில் உற்பத்தி செய்யக் கூடிய இயலுமை உடையவர்கள். ஆனால் விளைபொருட்களுக்கான விலைத் தளம்பல் அவர்களைப் பாதிக்கின்றது. நிலையான விலை கிடைக்குமாக இருந்தால் அவர்கள் இன்னமும் உற்சாகமாக பயிர்ச்செய்கையில் ஈடுபடுவார்கள். அதற்கு நான் முன்னரே குறிப்பிட்டதைப்போன்று பெறுமதி சேர் பொருட்களாக மாற்றுதல் மற்றும் ஏற்றுமதியை மேற்கொள்ள வேண்டும். இந்த அரங்கிலுள்ள தொழில்முனைவோர் அதைக் கவனத்திலெடுக்க வேண்டும்.

எமது விவசாயிகளில் சிலர் இன்னமும் பாரம்பரிய முறையிலேயே பயிர்ச் செய்கையை மேற்கொள்ள விரும்புகின்றனர். இன்று நவீன முறைகள் பல வந்துள்ளன. அதன் ஊடாக குறைந்த முதலீட்டில் அதிகளவு உற்பத்தியைப் பெற்றுக் கொள்ள முடியும். அதை நோக்கி அவர்கள் செல்லவேண்டும். அவர்களின் நடத்தைகளில் மாற்றம் தேவை.

எமது மக்கள் எல்லாவற்றையும் எதிர்ப்பு மனநிலையில் அணுகக் கூடாது. நான் யாழ். மாவட்டச் செயலராக இருந்த காலத்தில், கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது. எமது மக்கள் அதனையும் எதிர்த்தார்கள். சுத்திகரிக்கப்பட்ட பின்னர் செறிவு கூடிய நீர் கடலுக்குச் செல்லும்போது மீன் வளம் அழிவடையும் என்றார்கள். ஆனால் இன்று அந்தப் பகுதியில் அதிகளவு மீன்கள் பிடிபடுவதாகக் கூறுகின்றார்கள்.

அதைப்போல பளையில் காற்றாலை அமைக்கப்பட்டபோது மழை வராது என்று சொன்னார்கள். ஆனால், இன்று அவ்வாறான நிலைமை இல்லை. எனவே, எந்தவொரு விடயத்தையும் எதிர்ப்பது என்ற மனநிலையில் சிந்திக்காமல் அந்தத் திட்டங்கள் ஊடாக எங்களுக்கு என்ன நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற கோணத்தில் சிந்திக்கவேண்டும்." – என்றார் ஆளுநர்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் வர்த்தக மற்றும் தூதரக நிர்வாகத் தலைவர் ரம்யா சந்திரசேகரன், தேசிய தொழில் முயற்சி அதிகார சபையின் தலைவர் லக்ஸ்மன் அபயசேகர, பெஸ்ட் கப்பிடல் ஹோல்டிங்ஸ் நிறுவனத் தலைவர் ராஜேந்திரா தியாகராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஆஸ்திரேலியாவில் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் ஸ்தாபக உறுப்பினர் சின்னத்தம்பி துரைசிங்கம் மறைந்தார்



ஆஸ்திரேலியாவிலிருந்து நீண்ட காலமாக இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் ஸ்தாபக உறுப்பினரும், சிறந்த தன்னார்வத் தொண்டருமான சின்னத்தம்பி துரைசிங்கம் அண்மையில் மறைந்த செய்தி அறிந்து, கல்வி நிதியம் ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்கின்றது என அந்த அமைப்பு செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

கல்வி நிதியம் தொடங்கப்பட்ட காலத்தில், துரைசிங்கம், சிட்னியிலிருந்து பல வழிகளிலும் பேராதரவு வழங்கினார்.

குறிப்பாக சிட்னி தமிழ் மனித உரிமை அமைப்பின் ஊடாக அவர் வழங்கிய நிதியுதவி, நிதியத்தின் நிரந்தர வைப்பிலிடப்பட்டு, அதன் மூலமும் இலங்கையில் முன்னர் நீடித்த போரில், குடும்பத்தின் மூல உழைப்பாளிகளை இழந்த ஏழைத்தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆதரவு வழங்கப்பட்டது.

மெல்பனிலும், சிட்னியிலும் முன்னர் நடைபெற்ற கல்வி நிதியத்தின் தகவல் அமர்வுகளிலும் அவர் கலந்துகொண்டு உரையாற்றியமை குறிப்பிடத்தகுந்தது.

அன்னாரின் மறைவு கல்வி நிதியத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். கல்வி நிதியத்தின் மூலம் ஆதரவுபெற்ற மாணவர்கள் சார்பிலும், கல்வி நிதியத்தின் உறுப்பினர்கள் சார்பிலும், கல்வி நிதியம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றது. – என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# விசுவமடுவில் குளவிகள் தாக்கியதில் ஆறு மாணவர்கள் வைத்தியசாலையில்

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு விசுவமடுவில் இன்று காலை விசுவநாதர் ஆரம்ப பாடசாலை மற்றும் விசுவமடு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைக்கு சென்றுகொண்டிருந்த மாணவர்கள் மீது குளவிகள் தாக்கிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

12ஆம் கட்டை தபால் நிலைய வீதி பகுதியில் இராணுவத்தினரால் தோட்டம் செய்யப்படும் காணியிலுள்ள மா மரத்தில் இருந்த குளவிகள் கலைந்து மாணவர்களைக் கொட்டியதன் காரணமாக 6 மாணவர்கள் பாதிப்புக்கு இலக்காகினர்.

இவ்வாறு காயமடைந்த மாணவர்கள் உடனடியாக தர்மபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் குளவி தாக்குதலுக்குள்ளான மாணவர்களின் நலன் தொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் வே.கரிகாலன் நேரில் சென்று பார்வையிட்டு விசாரித்தறிந்தார்.



# உறவுகளுக்கு ஆறுதல் தெரிவிக்க மீண்டும் கரூர் செல்கின்றார் விஜய்

கரூர் வேலுசாமிபுரத்தில் கூட்ட நெரிசல் ஏற்பட்ட நிலையில், நேற்று முன்தினம் இரவே திருச்சி வந்த விஜய், தனி விமானம் மூலம் உடனடியாக சென்னை திரும்பினார்.

பிரசார கூட்டத்தில் திடீரென நெரிசல் ஏற்பட்டதற்கான காரணம், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு செய்ய வேண்டிய உதவிகள், அவர்களது குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறுவது ஆகியவை தொடர்பாக கட்சி நிர்வாகிகளுடன் விஜய் ஆலோசனை நடத்தினார்.

இதையடுத்து,உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல்கூறுவதற்காக விஜய் மீண்டும் கரூர் செல்ல அனுமதி கேட்டு, கட்சித் தரப்பில் பொலிஸில் மனு கொடுக்கப்பட உள்ளதாகவும் கூறப்படுகிறது.




இதேவேளை, கரூர் பிரசார கூட்டத்தின்போது கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 20 லட்சம் இந்திய ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு தலா 2 லட்சம் இந்திய ரூபாவும் நிவாரணம் வழங்கப்படுவதாக த.வெ.க. தலைவர் விஜய் அறிவித்துள்ளார்.

# விஜய் பிரசாரக் கூட்டத்தில் கல்வீச்சு இடம்பெறவில்லை

## பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு



கரூரில் த.வெ.க. பிரச்சாரத்தின் போது கல்வீச்சு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என ஏ.டி.ஜி.பி. டேவிட்சன் தேவாசீர்வாதம் தெரிவித்துள்ளார்.

கரூர் ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று ஆட்சியர் மீ.தங்கவேல், ஏ.டி.ஜி.பி. டேவிட்சன் தேவாசீர்வாதம், மின்வாரிய தலைமைப் பொறியாளர் ராஜலட்சுமி ஆகியோர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தனர். அப்போது, ஏ.டி.ஜி.பி. டேவிட்சன் தேவாசீர்வாதம் கூறும்போது,

''வேலுசாமிபுரத்தில் நடந்த பரப்புரையின்போது கல்வீச்சு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. த.வெ.க. தலைவரின் வாகனம் கரூர் மாவட்டம் தளவாபாளையத்தில் இருந்து திருகாம்புலியூர் ரவுண்டானா வர 2 மணி நேரமாகியது. சாதாரணமாக 30 நிமிடங்களில் அந்த இடத்தைக் கடந்துவிடலாம். சிறிது நேரம் வாகனத்திலிருந்து வெளியே வந்த த.வெ.க தலைவர், பின்னர் உள்ளே சென்றுவிட்டார். இதனால், அங்கிருந்தவர்களுக்கு அவரை பார்க்கும் ஆர்வம் அதிகரித்தது.

அதீத கூட்டத்தால் பிரசார இடத்துக்கு முன்பே வாகனத்தை நிறுத்தி பிரச்சாரம் செய்யும்படி பொலிஸார் கூறியுள்ளனர். ஆனால், அந்த அறிவுறுத்தலை ஏற்காமல், திட்டமிட்ட இடத்திலேயே பிரசாரம் மேற்கொண்டனர்.

சம்பவ இடத்தில் இருந்த பொலிஸார் கேட்டுக்கொண்டதாலேயே 10 இற்கும் மேற்பட்ட நோயாளர்காவு வண்டிகள் அனுப்பப்பட்டன. கூட்டம் காரண மாக நோயாளர்காவுவண்டிகூட உள்ளே செல்ல முடியவில்லை. அனுமதிகேட்ட நேரத்தைவிட 4 மணி நேரம் தாமதமாகவே பிரசாரத்தை தொடங்கினார். அதிக கூட்டம் கூடும் போது அரசியல் கட்சியினர் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.'' - என்றார்.

# நீதிபதி அருணா ஜெகதீசன் விசாரணை தொடக்கம்: புஸ்ஸி ஆனந்த் உள்ளிட்ட நிர்வாகிகள் மீது வழக்கு

தமிழக அரசின் உத்தரவை தொடர்ந்து, உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையிலான ஆணையம் கரூரில் நேற்று விசாரணையை தொடங்கியது.

இந்நிலையில், நேற்று கரூர் வந்தடைந்த நீதிபதி அருணா ஜெகதீசன், நெரிசல் சம்பவம் நடந்த வேலுசாமிபுரத்தில் ஆய்வு செய்தார். பொலிஸாரிடமும், அப்பகுதி மக்களிடமும் சம்பவம் குறித்து கேட்டறிந்தார். அங்கு நடந்த நிகழ்வுகளை காவலர்கள், பொதுமக்கள் அவரிடம் விளக்கமாக எடுத்துரைத்தனர். அப்போது சிலர் நீதிபதியிடம், “ஒருசிலரிடம் மட்டும்



விசாரணை மேற்கொள்ளாமல், அனைத்து தரப்பினரிடமும் விசாரிக்க வேண்டும். விஜய் பேச வந்தபோது மின்சாரம் திடீரென தடைபட்டது, ஒலிபெருக்கி வேலை செய்யாதது உட்பட அனைத்து விஷயங்கள் குறித்தும் முறையாக விசாரணை மேற்கொள்ள வேண்டும்” என வேண்டுகோள் விடுத்தனர்.

அதற்கு அவர், “சம்பவம் தொடர்பான அனைத்து நிகழ்வுகள் குறித்தும், அனைத்து தரப்பினரையும் சந்தித்து விசாரணை நடத்துவேன்” என்று உறுதியளித்தார்.

பின்னர், கரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களை சந்தித்து விசாரித்தார். அப்போது பலர் கதறி அழுதபடி சம்பவம் குறித்து அவரிடம் விவரித்தனர். இதற்கிடையே, கரூரில் செய்யப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள், உயிரிழப்பு தொடர்பாக முழுமையான விளக்கம் அளிக்குமாறு அரசிடம் ஆளுநர் அறிக்கை கேட்டுள்ளார்.






# ஐக்கிய இராச்சியத்தில் பணிபுரிபவர்கள் டிஜிட்டல் அட்டை வைத்திருக்க வேண்டும்

சட்டவிரோத குடியேற்றத்தைத் தடுக்கும் நடவடிக்கையாக, 2029 முதல் ஐக்கிய இராச்சியத்தில் பணி புரிய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட டிஜிட்டல் அடையாள அட்டை வைத் திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் அடையாள அட்டை முறையை அறிமுகப்படுத்திய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், இது சட்டவிரோ தமாக பிரித்தானியாவுக்குள் நுழைந்து வேலை செய்வதை கடினமாக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த திட்டம் மக்களுக்கு பல சிறப்பு சலுகைகளை வழங்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும், டிஜிட்டல் அடையாள அட்டைகளால் சட்டவிரோத குடியே றிகளின் வருகையைத் தடுக்க முடி யாது என்று எதிர்க்கட்சி கூறியுள்ளது.

இந்த நிலையில், பிரதமரின் டிஜிட டல் அடையாள அட்டை முறை அறி விப்புக்கு எதிராக 1.6 மில்லியனுக்கும் அதிகமான கையெழுத்துகளுடன் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டைக்கு பதிவு செய்ய யாரையும் கட்டாயப்படுத்தக்கூடாது என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

அந்நாட்டின் பாரம்பரியத்தின்படி, ஒரு மனுவில் 100,000 க்கும் மேற்பட்ட கையொப்பங்கள் பெறப்பட்டால், அது நாடாளுமன்றத்தில் விவாதிக் கப்பட என்பது குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்புரிமைக்கு இந்தியாவுக்கும், ஜப்பானுக்கும் தகுதி உள்ளது

## பூட்டான் பிரதமர் தெரிவிப்பு



ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன் சிலில் நிரந்தர உறுப்பினராவதற்கு, இந்தியாவும், ஜப்பானும் தகுதியான நாடுகள் என பூட்டான் பிரதமர் ஷெரிங் டோப்கே ஆதரவு தெரிவித் துள்ளார்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில், ஐ.நா வின், 80 ஆவது பொதுச் சபை கூட்டம் நடந்து வருகிறது.

இந்நிலையில் கூட்டத்தில் பங் கேற்ற பூட்டான் பிரதமர் ஷெரிங் டோப்கே, ஐ.நா பாதுகாப்பு கவுன்சி லில், இந்தியாவும், ஜப்பானும் நிரந்தர உறுப்பினராவதற்கு தன் ஆதரவை தெரிவித்துள்ளார்.

மேலும் , இன்றைய உலக நிலவ ரத்தை பிரதிபலிக்கும் வகையில், ஐ.நாவில் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் அது பயனுள்ள அமைப்பாக இருக்க வேண்டும் என் றால், கவுன்சிலின் நிரந்தர மற்றும் நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளின் எண் ணிக்கையை அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், திறன்கள் மற்றும் தலைமை பண்பிற்காக, இந்தியாவும், ஜப்பானும் பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டும் எனவும் இதுதவிர ஏனைய திறமையான முன்னணி நாடுகளும் கவுன்சிலில் இடம் பெற வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சில் தீர்மானங்களை மட்டும் நிறைவேற்றும் அமைப்பாக இல்லா மல், உறுதியான முடிவுகளை எடுப்ப தில் கவனம் செலுத்தும் அமைப்பா கவும் இருக்க வேண்டும் எனவும் பூட்டான் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

# அணுசக்தி திட்டத்தை கைவிட மறுக்கும் ஈரான் மீது ஐ.நா. பொருளாதாரத் தடை

அணுசக்தி திட்டங்களைக் கைவிட மறுக்கும் ஈரான் மீது ஐக்கிய நாடுகள் சபை மீண்டும் பொருளாதாரத் தடை களை விதித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு உலக வல்லரசுக ளுடன் ஈரான் அணுசக்தி ஒப்பந்தத் தில் கையெழுத்திட்டிருந்தது.

ஆனால் ஒப்பந்த விதிகளை மீறிய தற்காக, அதே ஒப்பந்தத்தில் இடம் பெற்ற 'ஸ்னாப்பேக்' என்ற அம்சம் மூலம் தற்போது நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

அதாவது இந்த ஒப்பந்தம் செய்வ தற்கு முன் ஈரான் மீது விதிக்கப்பட் டிருந்த தடைகள் 10 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் செயல்பாட்டுக்கு வந்துள்ளன.

தற்போது அமலுக்கு வந்துள்ள இந்தத் தடையால் ஈரானின் வெளி



நாட்டுச் சொத்துகள் முடக்கப்படும், ஆயுத விற்பனை ஒப்பந்தங்கள் நிறுத் தப்படும்.

அத்துடன், பாலிஸ்டிக் ஏவுகணைத் திட்டங்களை மேம்படுத்துவது தண் டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும்.

முன்னதாக ஈரான் மீது பொரு ளாதாரத் தடை விதிப்பதற்காக பிரித் தானியா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் கொண்டு வந்த தீர் மானம் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையிலுள்ள உள்ள 15 நாடுகளின் வாக்கெடுப்புக்காக வைக்கப்பட் டது.

இதனைத் தொடர்ந்து, ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை மீண்டும் அமுல்படுத்துவதை ஆறு மாதங்கள் தாமதப்படுத்தக் கோரி நேற்று முன்தினம் ரஷ்யா மற்றும் சீனா கொண்டு வந்த வரைவு தீர்மா னத்தை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை நிராகரித்தது.

இதைத்தொடர்ந்து நேற்று முதல் பொருளாதாரத் தடைகள் அமலுக்கு வந்தன.

ஆனால், தங்கள் மீது தடை விதிக்க ஐக்கிய நாடுகள் சபைக்கு உரிமை இல்லை என்றும் இந்த தடைகளால் தங்களுக்கு எந்த பொரு ளாதார பாதிப்புகளும் இருக்காது எனவும் ஈரான் தெரிவித்துள்ளது.

கனடா முரசு

திங்கட்கிழமை | 29/09/2025

ஒன்டாரியோவில் விபத்து; 8 வயது சிறுவன் உயிரிழப்பு



02





# வெளிநாட்டு விஜயங்கள் அத்தியாவசியமானவை

## கனடிய பிரதமர் மார்க் கார்னி தெரிவிப்பு

தனது அண்மைய வெளிநாட்டு பயணங்களும் உலகத் தலைவர்களுடன் நடத்திய சந்திப்புகளும், கனேடியப் பொருள்களுக்கு புதிய சந்தைகளைத் திறப்பதற்கு அவசிய மானவை என கனேடிய பிரதமர் மார்க் கார்னி, தெரிவித்துள்ளார்.

கனடிய பிரதமர் தற்பொழுது பிரித்தானி யாவிற்கு விஜயம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரித்தானிய பிரதமர் கியர் ஸ்டார்மர் உடனான சந்திப்பில், ஜூன் மாதத்தில் ஒட் டாவாவில் எட்டிய ஒப்பந்தங்களின் முன் னேற்றம், பொருளாதார மற்றும் பாது காப்பு நடவடிக்கைகள், உக்ரைன் மற்றும் காசா போர்கள் உள்ளிட்ட சர்வதேச முன்னுரிமைகள் குறித்து விவாதிக்கப் பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். 03

# கனடாவில் பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்து செல்கிறது



கனடாவில் தொடர்ச்சியாக பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினை பதிவு செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் மொத்தப் பிறப்பு விகிதம் தொடர்ந்து குறைந்து, கடந்த ஆண்டில் பெண் ஒருவருக்கு 1.25 குழந்தைகள் என்ற வரலாற்று பின்னடைவை எட்டியுள்ளது.

கனடா புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்ட தரவுகள் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது. 03



# கனடாவில் ஐந்து மாகாணங்களில் குறைந்தபட்ச சம்பள அதிகரிப்பு

கனடாவின் ஐந்து மாகாணங்களில் சம்பள அதிகரிப்பு தொடர்பில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

உயர் வாழ்க்கைச் செலவுகளை சமாளிக்க தொழிலாளர்களும் நிறுவனங்களும் உதவுவதற்காக, ஐந்து கனடிய மாகாணங்களில் ஒக்டோபர் 1 முதல் குறைந்தபட்ச சம்பளம் உயர்த்தப்படுகிறது.

இந்த மாற்றம் ஒன்டாரியோ, மானிடோபா, சஸ்காட்செவன், நோவா ஸ்கோஷியா மற்றும் பிரின்ஸ் எட்வர்டு தீவு மாகாணங்களில் அமலுக்கு வருகிறது.

ஒன்டாரியோ மாகாணத்தில் ஒரு மணித்தியாலத்திற்கான சம்பளம் 17.60 டொலராக அதிகரிக்கப்பட உள்ளது.

பிரின்ஸ் எட்வர்டு தீவில் ஒரு மணித்தியாலத்திற்கான சம்பளம் 16.50 டொலராக அதிகரிக்கப்பட உள்ளது.

நோவா ஸ்கோஷியாவில் ஒரு மணித்தியாலத்திற்கான சம்பளம் 16.50 டொலராக அதிகரிக்கப்பட உள்ளது.

மானிடோபாவில் ஒரு மணித்தியாலத்திற்கான சம்பளம் 16 டொலராக அதிகரிக்கப்பட உள்ளது.

சஸ்காட்செவனில் ஒரு மணித்தியாலத்திற்கான சம்பளம் 15.35 டொலராக அதிகரிக்கப்பட உள்ளது.

அல்பெர்ட்டா குறைந்த சம்பளம் வழங்கும் மாகாணமாக மாற்றம் பெறும் என தெரிவிக்கப்படுகின்றது.



# ஒன்டாரியோவில் விபத்து; 8 வயது சிறுவன் உயிரிழப்பு

கனடாவின் வடகிழக்கு ஒன்டாரியோவில் இரண்டு ஆல்-டெர்ரெய்ன் வாகனங்கள் மோதியதில் 8 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை மாலை 7 மணியளவில் பிளம்மர் அடிஷனல் டவுன்ஷிப் பகுதியில் உள்ள க்ளவுட்ஸ்லீ ரோடு அருகே உள்ள வயலில் நடந்தது.

இரண்டு ஆல்-டெர்ரெய்ன் வாகனங்கள் மோதியதில், 8 வயது சிறுவன் வாகனத்திலிருந்து தூக்கி எறியப்பட்டுள்ளார் எனவும் அப்போது சிறுவன் தலைக்கவசம் அணிந்திருந்தார் எனவும் பொலிஸ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவன் உடனடியாக தெசலான் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் என அறிவிக்கப்பட்டது.

இந்த விபத்து தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், சிறுவனின் உடற்கூறு பரிசோதனை சட்பரி நகரில் நடைபெறஉள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# பிஸ்தா இறக்குமதிக்கு தடை விதித்தது கனடா

நாட்டில் பரவி வரும் சால்மொனெல்லா தொற்று காரணமாக ஈரானிலிருந்து பிஸ்தா மற்றும் பிஸ்தா கலந்த பொருள்களை இறக்குமதி செய்வதை கனடா தற்காலிகமாகத் தடை செய்துள்ளது. கனடாவின் உணவு ஆய்வு நிறுவனம் இந்த தடை குறித்து அறிவித்துள்ளது.

கனடியர்களின் உடல்நலத்தைப் பாதுகாக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இத்தடை விதிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளது.

ஆய்வு மற்றும் கண்காணிப்பு தரவுகள் மதிப்பாய்வு செய்யப்படும் வரை இந்தத் தீர்மானம் நீடிக்கும் என மேலும் தெரிவித்துள்ளது.

பிஸ்தா விதைகள் மற்றும் அவற்றால் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருள்களே சால்மொனெல்லா பரவலுக்குக் காரணமாக உள்ளதாக கனடாவின் பொது சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுவரை 100 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டமை ஆய்வக பரிசோதனைகள் மூலம் உறுதிசெய்யப் பட்டுள்ளது.

இந்த தாக்கத்திற்கு உள்ளான பல உணவுப் பொருள்கள் சந்தையில் இருந்து திரும்பப் பெறப்பட்டுள்ளன.

இனிமேல் கனடாவிற்கு பிஸ்தா இறக்குமதி செய்யும் நிறுவனங்கள், அவற்றின் மூலப்பொருள் ஈரானிலிருந்து அல்ல என்பதைக் கட்டாயமாக நிரூபிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம் இல்லையெனில், பொருள்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் அல்லது நேரடியாக நாட்டுக்குள் அனுமதி மறுக்கப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

---

## வெளிநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த பத்து ஆண்டுகளில் நூற்றுக் கணக்கான பில்லியன் டொலர்கள் முதலீடு செய்ய உள்ளோம் என தெரிவித்துள்ளார்.

இது கனேடியர்களுக்கு நூற்றுக் கணக்கான வேலை வாய்ப்புகளையும் நீண்டகால நலன்களையும் தரும் என குறிப்பிட்டுள்ளார்.

அந்த முதலீட்டிற்கான ஒரு பகுதி வெளிநாடுகளிலிருந்தே வர வேண்டும் என கார்னி தெரிவித்துள்ளார்.

லண்டனில் ஐரோப்பா, ஆசியா மற்றும் ஆப்பிரிக்க முதலீட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்தார்.

ஆனால், எதிர்க்கட்சி தலைவர் பியர் பொய்லிவ்ரே, கார்னியின் வெளிநாட்டு பயணங்கள் லிபரல் அரசின் அரசியல் நாடகம் மட்டுமே என்றும் கனடாவின் உள்நாட்டு பிரச்சினைகளான குற்றச்செயல்கள் மற்றும் வாழ்வாதாரச் சிக்கல்களை தீர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் விமர்சித்துள்ளார்.

---

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2023 இல் முதன்முறையாக பெண் ஒருவருக்கு 1.3 குழந்தைகளுக்குக் குறைவான விகிதத்தை பதிவு செய்திருந்தது.

பெண் ஒருவருக்கு 1.3 குழந்தைகளுக்கும் குறைவான விகிதம் Ultra-low fertility என வகைப்படுத்தப்படுகிறது.

இதே தரத்தில் உள்ள நாடுகளில் சுவிட்சர்லாந்து, லக்ஸ்சம்பர்க், பின்லாந்து, இத்தாலி, ஜப்பான், சிங்கப்பூர், தென் கொரியா ஆகியவை அடங்குகின்றன.

1950 களின் இறுதியில் பெண் ஒருவருக்கு 4 குழந்தைகள் என்ற உச்ச நிலையை எட்டியிருந்த கனடா, அதிலிருந்து தொடர்ந்து சரிவை சந்தித்து வருகிறது.